**தலைப்பு 235 – சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) ஆணைக்குழுவால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 இன் 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டிய போதிலும், குறித்த தேவைப்பாடுகளிலிருந்து விலகியிருந்த சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பட்டியலின் ரூபா 33,831,556 தொகையான பெறுமதிகள் அரச கணக்குகள் திணைக்களத்தின் பிரதான ஏற்பாட்டிலுள்ள மீதிகளுடன் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் இந்த திணைக்களத்தினால் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்குத் தவறியமை அதற்கான காரணமாகக் காணப்பட்டிருந்தது. | குறித்த சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியல்லாச் சொத்துக்களினை அறிக்கையிடுகையில், அந்த சொத்துக்களின் பிரதான ஏட்டு மீதியின் பெறுமதி தனிப்பட்ட சொத்துக்கள் பெறுமதியுடன் சமமானதாகக் காணப்படுகின்றதா என்பனை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஏதேனும், இணக்கஞ்செய்யப்படாத மீதி காணப்படுமானால், அந்த மீதி இனங்காணப்படும் வரை நாளேட்டு பதிவுகள் மூலம் பிரதான ஏட்டு மீதியில் அந்தப் பெறுமதிகள் திருத்தப்படல் வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்ட விடயத்துடன் இணக்கப்பாடு காணப்படுகின்றது. “A” தரத்திலான திணைக்களமாக இந்த திணைக்களத்தை மாற்றுவதற்கான விண்ணப்பபடிவமொன்று 2018 செப்தெம்பர் 31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரினூடாக தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும், அவற்றின் செயன்முன்னேற்றம் இதுவரை இந்த திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் வருமானமற்ற பெறுகைகள் ரூபா 13,463,776 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்ட ACA 3 வடிவத்தில் ரூபா 14,746,626 ஆகக் காட்டப்பட்டிருந்தது. ஆகையினால், ரூபா 1,282,850 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அவற்றிற்கான காரணங்கள் விபரிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதிகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுக்கிடையே ஏதேனும் வித்தியாசம் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான காரணங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும். | உடன்படுகின்றேன். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்ப்பனவுசெய்யப்பட்ட ரூபா 168,751 கட்டுநிதி காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் செலவினமொன்றாக காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அது துல்லியமாக அறிக்கையிடப்படல் வேண்டும். | உடன்படுகின்றேன். |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

**அவதானிப்பு**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் II இன் 13.3 ஆம் பிரிவு | பதில் நியமனமொன்று, நிரந்தரமான நியமானமொன்று மேற்கொள்ளப்படும் வரை தற்காலிக அடிப்படையொன்றில் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டிலிருந்து குறித்த பதவி தொடர்ச்சியாக | தாபனக் கோவையின் அத்தியாயம் II இன் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும், 2019 ஏப்ரல் 29 இல் உள்ளவாறு திணைக்களத்தின் செயலாளர் பதவிக்கான நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 880 ஆம் நிதிப்பிரமாணம். | பாதுகாப்பு எடுக்கப்பட வேண்டிய 07 உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு பெறப்பட்டிருக்கவில்லை | 880 ஆம் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொதுப் பணம் மற்றும் வருமான முத்திரைகளின் பெறுகை அல்லது பாதுகாப்பிற்காக நிர்வாக ரீதியாக பொறுப்புடையவர்களாகக் காணப்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் உறுதிச்சீட்டுக்களினை சான்றுறுதிப்படுத்தும் அல்லது காசோலையில் கைச்சாத்திடுகின்ற உத்தியோகத்தர்கள் பொது உத்தியோகத்தர்கள் (பாதுகாப்பு) சட்டத்தின் பிரகாரம் பாதுகாப்பினை வழங்க வேண்டும். | நீதி அமைச்சினால் இந்த திணைக்களத்திற்கு குறிப்பிடப்பட்ட 2016 ஒக்தோபர் 11 இன் MOJ/E16/1/1/8 ஆம் இலக்க மற்றும் 2016 ஒக்தோபர் 26 இன் MOJ/E16/1/1/(8) ஆம் இலக்க கடிதங்களின் பிரகாரம், மேலதிக நடவடிக்கைகளுக்காக நீதி அமைச்சினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அது அனுப்பப்பட்டிருந்தது. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மூலதன செலவின விடயமொன்றிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 20,000 முழுமையான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். |
| (ஆ) | 08 மீண்டெழும் செலவின விடயம் மற்றும் ஒரு மூலதன செலவின விடயத்துடன் தொடர்புடைய ரூபா 1.67 மில்லியன் தொகையான ஏற்பாடுகளின் சேமிப்புக்கள் மற்றுமொரு மீண்டெழும் செலவினவிடயம் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. மாற்றங்களின் சதவீதம் மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டின் 81 | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| சதவீத தொடக்கம் 131 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | | |
| (இ) 13 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 18.97 மில்லியன் மொத்த தேறிய ஏற்பாட்டில், ரூபா 6.43 மில்லியன் சேமிப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்புக்கள் 06 சதவீதம் மற்றும் 88 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) 08 செலவின விடயங்களுடன் தொடர்புடைய ரூபா 4.34 மில்லியன் தொகையான ஏற்பாடுகளின் சேமிப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட விளக்கமளிப்புக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகக் காணப்படவில்லை. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களில் சுருக்கமாக தொடர்புடைய விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றதுடன், மேலும் விரைவில் அது விபரமாக விபரிக்கப்படுமென நான் அறியத்தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் 11 பிரதான செலவின விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மேற்குறிப்பிடப்பட்டவற்றில் சில முக்கிய செயற்பாடுகள் தொடர்புடைய சட்ட திருத்தங்களுக்காக மாத்திரம் 10 பரிந்துரைகள் மீளாய்வாண்டில் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில், ஒரு பரிந்துரையின் திருத்தங்கள் நீதி அமைச்சின் செயலாளருக்கு அறியச்செய்யப்பட்டிருந்த அதேவேளை 02 பரிந்துரைகளின் வரைவுகள் அமைச்சு செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும் 07 சட்ட பரிந்துரைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிராது இதுவரை கலந்துரையாடலின் கீழ் காணப்படுகின்றன. | பரிந்துரைக்கப்பட்ட சட்டத் திருத்தங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தொடர்புடைய திருத்தஞ் செய்யப்பட்ட சட்ட அறிக்கைகள் தாமதமின்றி அமைச்சரவையினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டியதுடன் மேலும், அவற்றிற்கு தேவையான பின்தொடர் நடவடிக்கைகள் சரியான நேரத்தில் எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். |
| (ஆ) 2018 ஒக்தோபர் 01 இலிருந்து திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது சட்ட ஆணைக்குழுவின் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்காமையினால், சட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவின் கூட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும். | - மேற்படி - |

### 3.2 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 இன் 2014/01 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், செயலாற்றலினை திட்டமிடுகையில் திணைக்களத்தினால் செயற்படுத்த வேண்டிய 11 முக்கிய செயற்பாடுகள் காணப்பட்டன. குறித்த செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினைப் பெற்றுக்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்ட திணைக்களத்தின் நிறுவன அமைப்பு வரைபடத்தின் விபரங்கள் மற்றும் வருடாந்த செயற்பாடுகளுக்கு தேவையான, கட்டுநிதித் தேவைப்பாடுகளின் திட்டம்கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல்வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். |

### 3.3 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நீதி மற்றும் சிலைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சினால் மாற்றஞ்செய்யப்பட்ட 03 மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவம், 2019 மார்ச் 18 வரையிலும் மாற்றத்தினை பெற்றிருக்கவில்லை. | நிதிநிலைமைக்கூற்றில் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியில் இந்த மோட்டார் வாகனங்கள் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்டமையினால், உரிமைத்துவத்தினை மாற்றஞ்செய்வது விரைவுபடுத்தப்படல் வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். இந்தத் திணைக்களத்திற்கு குறித்த மோட்டார் வாகனங்களினை மாற்றிப்பெற்றுக்கொள்வதற்கு 2017 ஒக்தோபர் 26 மற்றும் 2017 நவம்பர் 08 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் வேண்டுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றேன். |